கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 244/2018

பிரதிவாதிகள் தரப்பு சாட்சி – 3 ராதிகா என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு பி.சா.3 ன் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1. மஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள சர்வே எண்.77 ஆனது சர்வே எண்.77/1 முதல் 77/6 வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அதில் வாதியின் பெயர் இல்லை. என்னிடம் காட்டப்படும் வரைபடமானது எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட மஞ்சநாயக்கன்பட்டி கிராம தொகுப்பு புல படமானது கடந்த 22.09.1998 அன்று மஞ்சநாயக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலரரால் வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் ஆகும். **மேற்படி கிராம நிர்வாக அலுவலரால் சான்றளிக்கப்பட்ட மஞ்சநாயக்கன்பட்டி கிராம தொகுப்பு புல படம் பி.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( பி.சா.ஆ.22 ஆவணமானது வாதி தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

**2.** மேற்படி பி.சா.ஆ.22 ஆவணத்திற்கும் அதன் அசல் தொகுப்பு புல வரைபடத்திற்கும் வேறுபாடுகள் உள்ளது. மேற்படி மஞ்சநாயக்கப்பட்டி கிராமத்தில் புல எண்.52ல் அசல் தொகுப்பு புல வரைபடத்தில் பாதை எதுவும் இல்லை. ஆனால் பி.சா.ஆ.22 புல எண்.52ல் பாதை இருப்பது போல் கையால் வரையப்பட்டுள்ளது. வண்டிப்பாதையானது புல எண்.72, 73,68,67 ஆகிய புல எண்களில் செல்கிறது. சர்வே எண்.74ல் பட்டா நிலத்தில் வண்டிப்பாதை உள்ளது. சர்வே எண்.76/16 நிலமானது பாதை என்று குறிப்பிடவில்லை.

3. பொன்னம்மாள், முனியம்மாள், காளியப்பன் ஆகியோர் பெயரில் பட்டா நிலமாக தான் உள்ளது. பி.சா.ஆ.22 ல் புல எண்.76/16ல் பாதை உள்ளதாக காண்பிக்கப்பட்டு வரையப்பட்டுள்ளது. ஆனால் புல எண்.76/16ற்கான அசல் தொகுப்பு புல வரைபடத்தில் அவ்வாறான பாதை எதுவும் குறிப்பிடவில்லை. சர்வே எண்.75/1ல் பட்டா எண்.2040

ச.முத்துசாமி மற்றும் ஐந்து நபர்கள் பெயரில் பட்டா நிலமாக உள்ளது. குறிப்பில் பூஸ்துதி வண்டிப்பாதை என்ற குறிப்பு உள்ளது. சர்வே எண்.75 ல் உள்ள பாதை வண்டிப்பாதையானது சர்வே எண்.77 வழியாக செல்லவில்லை. புல எண்.75 ல் வண்டிப்பாதை முடிந்துவிடுகிறது.

4. சர்வே எண்.74/1 ல் பட்டாவுடன் சேர்ந்த வண்டிப்பாதை செல்கிறது. புல எண்.76 ல் வண்டி பாதை எதுவும் இல்லை. சர்வே எண்.74 ல் உள்ள வண்டிப்பாதையானது புல எண்.74 ல் முடிவடைந்துவிடுகிறது. புல எண்.74 ல் வண்டிப்பாதையானது புல எண்.76 ல் செல்லவில்லை. புல எண்.74 மற்றும் 75 லிருந்தும் பட்டா பாதை செல்கிறது. ஆனால் புல எண்.77 ல் பாதை செல்லவில்லை.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. பி.சா.ஆ.22 ஆவணத்திற்கும் எங்களின் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அதன் அசல் ஆவணத்திற்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் சரிதான். எங்கள் துறையில் சான்றிட்ட நகல் வாங்க வேண்டும் என்ன நடைமுறை என்றால் மனு அளித்து அதன் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் பின்பு தான் சான்றிட்ட நகல் வழங்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு பி.சா.ஆ.22 ஆவணத்தில் மனு எண், உத்தரவு எண் ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.22 அவணமானது முறையாக விதிமுறைகளை பின்பற்றாமல் வழங்கப்பட்டுள்ள ஆவணம் என்றால் சரியல்ல.

2. பி.சா.ஆ.22 ஆவணத்தை பொறுத்து பி.சா.ஆ.22 ஆவணத்தை வழங்கிய அலுவலர் தான் சாட்சியம் அளிக்க முடியும் என்றால் சரிதான். பி.சா.ஆ.22 ஆவணத்தில் சிவப்பு நிற மையால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தம் பி.சா.ஆ.22 ன் அசல் ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். மேற்படி திருத்தமானது எங்கள் துறை சார்ந்த அலுவலர்களோ, அதிகாரிகளோ யாரும் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது. சர்வே எண்.77 ற்கு மேல்புறத்தில் புல எண்.51,78, 79 உள்ளது என்றால் சரிதான்.

3. வடபுறத்தில் புல எண்.52 உள்ளது. தென்புறத்தில் சர்வே எண்.75 உள்ளது. கீழ்புறத்தில் புல எண்.76 உள்ளது. புல எண்.52 மற்றும் 79 ல்

இருந்து புல எண்.77 யை வந்தடைவதாக பாதை எதுவும் இருப்பதாக எங்கள் அலுவலக ஆவணங்களில் குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.75 ஆனது சர்வே எண்.75/1 முதல் 75/7 வரையான உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.75/1 ஆனது பட்டா நிலத்தில் பட்டா பாதையாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.75 ற்கு வடபுறம் சர்வே எண்.77 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.77 ற்கும் சர்வே எண்.74 ல் உள்ள பாதைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.75/1 ன் மொத்த விஸ்தீரனம் தெரியுமா என்றால் ஹெக்.0.27.00 ஏர்ஸ் ஆகும்.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**